# Appointment of Legal Advisors to Salem, Madurai, Tirunelveli, Trichy & Kancheepuram Crime Branch CID Ranges, Tamil Nadu.

## INSTRUCTIONS TO CANDIDATES

Selection is purely merit-based. CBCID hereby cautions the candidates against touts and agents who may cheat, by making false promises of securing the post through unfair means. CBCID shall not be responsible or liable for any loss that may be caused to any candidate on account of indulging in any sort of dealings with such unscrupulous elements.

No candidate shall-

i. influence or attempts to influence, or obtains or attempts to obtain any favour in any form at any stage of selection process; or
ii. allow impersonation for him/her and does impersonation for a candidate; or
iii. make or submit any forged documents in support of his or her candidature; or
iv. conceal any material information or provide any false information or make any false/ wrong claim at any stage of selection process; or
v. attempt to enlist support or canvasses in any form for his/her candidature or selection/appointment, through persons of influence or officers of Government/High Court.

**I. ELIGIBILITY CRITERIA:**

1) **Educational Qualification:**

Must possess a Degree in Law of a University in India established or incorporated by or under a Central Act or a State Act or an Institution recognised by the University Grants Commission, or any other equivalent qualification.

*Note: (i) The educational qualification prescribed for the post should have been obtained by passing the required qualification in the following order of studies: 10th + HSC or its equivalent + Bachelor's degree as required under Section 25 of the Tamil Nadu Government Servants (Conditions of Service) Act, 2016.*

*(ii) Applicants claiming equivalence of qualification to the prescribed qualification should upload and submit evidence for equivalence of qualification, in the form of Government Order issued on or before the date of this Notification, and submit it along with the application, failing which, their application will be summarily rejected after due process.*

*The Government Orders regarding equivalence of qualification issued after the date of this Notification will not be accepted.*

2) **Enrolment and Experience:**

i. Must be enrolled in the Bar Council of Tamil Nadu and Puducherry or in the Bar Council of any other State in India.

ii. Must be practising as an Advocate or Pleader in any Court within TN on the date of Notification for recruitment to the post and must have so practised for a period of not less than 10 years on such date.

iii. The Competent Authority to issue the practice certificate is Public Prosecutor, High Court of Madras, Additional Public Prosecutor, High Court of Madras, District Public Prosecutor, Additional Public Prosecutor, Special Public Prosecutor of the Directorate of the Prosecution and Senior Advocate.

*Note: a) Senior Advocate means Advocate designated as Senior Advocate by the High Court of Madras in exercise of the powers conferred by section 16(2) of the Advocates Act, 1961.*

*b) Candidates must be practising as an Advocate in Criminal Courts on the date of Notification and must continue to be a Practising Advocate till the date of selection and appointment.*

*c) "Criminal courts" means courts as so classified under section 6 of the BNSS, 2023.*

3) **Languages:**

Must possess adequate knowledge to read, write and speak in English and Tamil.

***Explanation.-*** For this purpose, a person will be deemed to possess an adequate knowledge of Tamil if he has passed the S.S.L.C. Public Examination or its equivalent examination with Tamil as one of the languages.

4) **Age Limit:** The candidates should have completed the age of 35 years as on 1.1.2025 and should not have completed the age of 65 years.

5) **Other criteria:-**

(i) Must be eligible as per the provisions of Section 20(7) of the Tamil Nadu Government Servants (Conditions of Service) Act, 2016.

6) The Candidate should have good knowledge in New Criminal laws (BNSS, BNS and BSA)

7) **Period of Contract: Contract will be for a period of one year. Annual renewal will be done based on the performance.**

8) **Nature of duty:**

(i) He / She should be an expert in preparation of counter affidavits, Status Reports etc., in Hon'ble High Court / Supreme Court matters.

(ii) He / She shall, among other things, (a) assist the IOs in thorough vetting of CD files, (b) offer legal opinions, (c) prepare counters/status reports/bail opposition/ stay vacate petitions/ police custody/other court matters relevant to the cases investigated by CBCID.

**(ii)** He/She shall assist the ADGP, CBCID in all other miscellaneous works requiring legal expertise like preparation of new draft laws, conduct of State Police duty meets, training of Police officers, etc.

**(iii)** He/She shall appear in court on behalf of CBCID for specific cases, if required.

**(iv)** He/She should ensure that there is no conflict of interest**.**

**(v)** He/She shall not appear against CBCID/ Tamil Nadu Police in any case.

**(vi)** He/She shall maintain utmost integrity, neutrality and anonymity while discharging his/her duties.

**(vii)** He/She shall not be affiliated with any political party, communal organisation or any particular organisation run by Political parties

**(viii)** It is a FULL TIME job and should not be employed anywhere else.

9) **Termination:** In case of any adverse remarks/failure in discharge of duties, contract will be terminated with one months' notice period. This condition is not applicable for the Candidates found to be involved in grave offence /

delinquency, in which case, contract of the said candidate will be terminated immediately.

10) **Disqualification for Appointment:-**

No person shall be qualified for appointment:

(i) who has entered into, or contracted marriage or living in relationship with a person having a spouse living, or who, having a spouse living, has entered into or contracted a marriage or living in relationship with any person; or

(ii) who has been dismissed or removed or had stigmatic termination from the services by Central Government or by State Government or High Court or Statutory or Local authority or from any employment; or

(iii) who, after being selected as a Assistant Public Prosecutor/Judicial Officer/ Government Servant, has been discharged / removed from service or convicted/ acquitted/ discharged of any offence; or

(iv) who is or has been temporarily or permanently debarred or disqualified by the High Court or the Union Public Service Commission or any State Public Service Commission or any other Recruitment Agency, Board or Commission, from appearing for examinations/interview or selections conducted by it; or

(v) who has been removed or suspended from its roll by any Bar Council; or

(vi) against whom disciplinary proceedings have been initiated or penalty or punishment has been imposed or contemplated by the Bar Council or any Disciplinary Authority or Court, which in the opinion of the Hon'ble High Court, renders him/her unsuitable for appointment in Judicial Service; or

(vii) who, being an Advocate, was found guilty of professional misconduct by the Bar Council under the provisions of Advocates Act, 1961 (Central Act 25 of 1961) or orders of the Court or Judicial forum.

11) **Character and Conduct:**

a) The character of a candidate must be such as to make him/her suitable in all respects for appointment to the post. He/She must produce a certificate of character and conduct given after the date of notification from a Senior Advocate or Senior Counsel or an Advocate who has a standing of not less

than ten years at the Bar not being relatives of the applicants, but who are well acquainted with the applicant in his/her personal life.

b) No person shall be appointed to the post unless he/she is in good mental and physical health.

12) **Self Declaration Certificate:-**

Candidates, besides the copies of Degree Certificate and Enrolment Certificate issued by the Bar Council, a Self Declaration certificate that he/she has enrolled in the Bar Council and continues to be a practising advocate for ten years or more (he/she has to attach the details of cases, conducted by him/her preferably for the last three years to fortify his/her claim of having been in active practice) have to be attached with the application.

13) **Medical and Physical Standards:**

i) Candidates selected for appointment to the post will be required to produce a certificate of physical fitness to the appointing authority at the time of joining the post.

ii) The visual acuity of the candidates will have to be Standard – III or better. Candidates with defective vision should produce an Eye Fitness certificate from a qualified Eye Specialist working in a Government Hospital to the appointing authority at the time of joining the post.

**II. Pay:** Consolidated pay of Rs.50,000/- per month (On Contract Basis)

**III. Rule of Reservation :** The rule of reservation of appointments is not applicable for this recruitment.

**IV. SELECTION PROCESS:**

1. Five candidates will be selected as the main candidates, one per CBCID range viz. Salem, Madurai. Tirunelveli, Trichy and Kancheepuram ONLY as per the announcement of the Hon'ble Chief Minister of Tamil Nadu.
2. The candidates shall give order of preference of place of posting in the application itself. Atleast one place of preference should be mentioned in the

application. The applications without any order of preference will summarily be rejected.

**3.** After scrutiny of the applications received, the eligible candidates will be summoned before a Selection Committee for a Viva-voce test at CBCID headquarters. The candidate who obtains highest marks will be selected for the post.

**4.** **Viva-Voce Test:-**

(i) **Candidates summoned for Viva-voce test shall be announced on the Tamil Nadu Police website and intimated over phone through the mobile number provided in the application**. On the date of Viva-voce test, original certificates in support of the claims made in the application for the post for which he is summoned for Viva-voce test will be verified based on the claims made in the application. After thorough scrutiny of original documents, the application will be admitted finally. Then, the Viva Voce test will be conducted for the Selected Candidates. During scrutiny of the applications, if any of the document is not produced per “Instructions to Candidates” or any of the document produced by the Candidate is found to be false/forged, the said Applicant will be disqualified and will not be allowed to participate in the Viva Voce.

(ii) **Viva Voice test** consists of 60 marks. Candidates must secure a minimum of 18 marks to qualify.

(iii) The object of viva-voce test is to assess the suitability of the candidate for the post by judging the mental alertness, general knowledge, knowledge of law, Knowledge of new criminal laws (BNS, BNSS, BSA), grasp of procedural laws and principles of law, clear and logical exposition, balance of judgment, skills, attitude, ethics, power of assimilation, power of communication, character, suitability and intellectual depth, the like of the candidate, his/her tact and ability to handle various situations in the Court.

(iv) Candidates scoring less than 18 marks will be disqualified.

(v) Since ‘Character’ and ‘Suitability’ of a Candidate are of utmost importance for being considered, for appointment to the post, the character and suitability of the candidate would be enquired into and verified by the Competent Authority.

5. **Shortlisting of Candidates:**

The mark list will be sorted in order of Highest to lowest marks. From the top scoring candidates, the 5 posts of Legal Advisor for Salem, Tirunelveli, Madurai, Trichy and Kancheepuram will be filled up by CBCID based on the suitability.

The candidate with top mark will be given his/ her 1st place of preference. Thereafter, the candidate with 2nd highest marks will be allotted his/her 1st place of preference if it is not taken by 1st candidate. If already allotted to the Candidate with top marks, the 2nd place of preference will be given and so on.

In case of any tie in marks, the educational qualification, notable achievements and other outstanding criteria as follows will be considered by the Selection Committee to arrive at the final decision.

| S.No. | CRITERIA |
|---|---|
| 1. | Educational qualification – PG |
| 2. | More than 15 YEARS of experience |
| 3. | Any PUBLICATIONS on legal topics / Part of Committee in Drafting New Laws / Acts |
| 4. | Details of Reported cases |
| 5. | Any notable achievements of considerable uniqueness in the field of Law |

**The decision of the Selection Committee is final.**

6. **Reserve list:**

   Five Reserve candidates will also be selected and kept on standby. In case of any main candidate failing to join the post as per conditions of CBCID, the top candidate in the reserve list will be considered for appointment.

7. **Intimation of Selection List:**

   The list will be uploaded on TN Police website and official communication of the selection will be sent to the individuals via post as well. Once the appointment order is issued, if the Selected Candidate fails to join as per the timelines mentioned in the appointment letter, the appointment of the said

person will be cancelled and the next candidate in the merit list will be considered for appointment.

## V. REJECTION OF APPLICATIONS:

(i) Incomplete applications or applications containing incorrect particulars relating to eligibility / age /gender / educational qualification / medium of instruction / other basic qualifications and other basic eligibility criteria will be summarily rejected after due process.

(ii) In case of wrong claims made with malafide intent with regard to eligibility/ age / gender / educational qualification / medium of instruction / other basic qualifications and other basic eligibility criteria will be summarily rejected after due process.

## VI. SUPPORTING DOCUMENTS:

i. SSLC and HSC / Diploma and Degree / Provisional Degree / Consolidated Mark Sheet shall be accepted as proof of educational qualification.

ii. Candidates must produce the Enrolment certificate issued by the Bar council as a proof for member of the Bar.

iii. Any one government issued Photo ID.

iv. Practising certificate as mentioned above.

v. Self Declaration Certificate.

vi. Details of cases (Reported and unreported) conducted by the candidate.

vii. Other required documents viz. Fitness certificate, Character & Conduct Certificate and the documents relating to notable achievements, other criteria in application which the candidate wishes to produce to the Selection Committee.

## VII. LAST DATE FOR SUBMISSION OF APPLICATION:

Last date for submission of application is **18.02.2025.**

**<u>தமிழ்நாடு, குற்றப்பிரிவு குற்றப்புலனாய்வுத் துறை,</u>**

**<u>சேலம், மதுரை, திருநெல்வேலி, திருச்சி மற்றும் காஞ்சிபுரம் சரகங்களுக்கு ஒப்பந்த அடிப்படையில் சட்ட ஆலோசகர் பணி நியமனம் செய்வது தொடர்பாக.</u>**

**<u>விண்ணப்பதாரர்களுக்கான விதிமுறைகள்</u>**

தகுதி அடிப்படையில் நியமனம் நடைபெறும். முறைகேடான வழிகளில் வேலை வாங்கித் தருவதாக முகவர்கள் மற்றும் மோசடி நபர்கள் பொய்யான வாக்குறுதிகள் தந்து விண்ணப்பதாரர்களை ஏமாற்ற முயற்சிப்பதற்கான நடவடிக்கைகளில் ஈடுபடக்கூடும் என்பதால் விண்ணப்பதாரர்களை குற்றப் பிரிவு, குற்றப் புலனாய்வுத் துறை மிகவும் எச்சரிக்கையாக இருக்குமாறு கேட்டுக் கொள்கிறது. மோசடி நபர்களின் மூலமாக நடைபெறும் எத்தகைய மோசடி நடவடிக்கைகளுக்கும் அதனால் விண்ணப்பதாரர்களுக்கு ஏற்படும் எத்தகைய இழப்பீடுகளுக்கும் குற்றப் பிரிவு குற்றப் புலனாய்வுத் துறை பொறுப்பேற்காது என்று விண்ணப்பதாரர்கள் எச்சரிக்கப்படுகிறார்கள்.

விண்ணப்பதாரர்கள் எவரும் கீழ்க்கண்ட எந்த தகாத செயலிலும் ஈடுபடல் கூடாது.

i. நியமனம் தொடர்பான செயல்பாடுகளில் செல்வாக்கினைப் பயன்படுத்துதல் அல்லது செல்வாக்கினைப் பயன்படுத்த முற்படுதல் அல்லது எந்தவொரு தருணத்திலாவது செல்வாக்கின் அடிப்படையில் சலுகைகள் பெறுதல் அல்லது முற்படுதல்; அல்லது

ii.தனக்காக பிறிதொரு நபரை ஆள்மாறட்டம் செய்தல் மற்றும் மற்றொரு விண்ணப்பதாரருக்காக தானே ஆள்மாறட்டம் செய்தல்; அல்லது

iii.விண்ணப்பதாரர் தனக்காக அல்லது வேறு ஒருவருக்காக போலியாக ஆவணங்களை தயாரிப்பது அல்லது சமர்ப்பிப்பது; அல்லது

iv. அடிப்படையிலான பொருள் சார்ந்த விவரங்களை மறைத்தல் அல்லது தவறான தவகல்களை சமர்ப்பித்தல் அல்லது ஏதேனும் ஒரு நிலையில் நியமனம் தொடர்பான நடைமுறைகள் நடைபெறுகின்ற நேரத்தில் தவறான மற்றும் நடைமுறைக்கு மாறான வழிகளில் கோருதல் அல்லது

v. செல்வாக்குடைய நபர் மூலமாகவோ அல்லது அரசு மற்றும் உயர்நீதிமன்ற அதிகாரிகள் மூலமாகவோ ஏதேனும் ஒரு வகையில் தனது நியமனத்திற்காக ஆதரவை நாடுதல் அல்லது அதற்காக உதவியைக் கோருதல்.

I. பணி நியமனத்திற்கான தகுதி

1. கல்வித் தகுதி

இந்தியாவில் நிறுவப்பட்டுள்ள பல்கலைக் கழகத்திலோ அல்லது பதிவுற்ற அல்லது மத்திய அரசுச் சட்டம் அல்லது மாநில அரசுச் சட்டம் அல்லது பல்கலைக் கழக மானியக் குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்திலோ சட்டப் படிப்பில் பட்டயம் பெற்றிருக்க வேண்டும்.

(குறிப்பு– i. மேற்படி பணியிடத்திற்கான நிர்ணயிக்கப்பட்ட கல்வித் தகுதியில் கீழ்க்கண்ட வரிசைக்கிரமம் அடிப்படையில் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். 10+12ஆம் வகுப்பு அல்லது அதற்கு இணையான படிப்பு + 2016ஆம் ஆண்டு தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள் (பணி விதிமுறைகள்) சட்டம், பிரிவு 25ன் கீழ் நிர்ணயிக்கப்பட்ட இளங்கலைப் பட்டம்.

ii) நிர்ணயிக்கப்பட்ட கல்வித் தகுதிக்கு இணையான கல்வித் தகுதியுடையதாகக் கருதி விண்ணப்பிக்கும் நபர்கள், மேற்படி பணி தொடர்பாக இந்த அறிவிக்கை வெளியிட்ட தேதி அன்றோ அல்லது அதற்கு முன்பாகவோ வெளியிடப்பட்ட அரசு ஆணையின் அடிப்படையில் கூறப்பட்டுள்ளதற்கிணங்க அத்தகைய கல்வித் தகுதிக்கான சான்றிதழ்களை விண்ணப்பம் அனுப்பப்படுகின்றபோது அதனுடன் இணைத்து அனுப்ப வேண்டும். மேற்படி கல்வித் தகுதி குறித்த உரிய சான்றிதழ்களை அனுப்ப தவறினால் விண்ணப்பம் உரிய பரிசீலனைக்குப் பிறகு நிராகரிக்கப்படும். மேற்படி கல்வித் தகுதி தொடர்பாக நியமன அறிவிக்கை வெளியிடப்பட்ட தேதிக்குப் பின்னர் வெளியான அரசு ஆணைகளின் பேரில் விண்ணப்பதாரர்கள் மேற்படி பணிக்கு நிர்ணயிக்கப்பட்ட கல்வித் தகுதிக்கு இணையான தகுதியுடையவராக இருந்தாலும் அவரது விண்ணப்பம் ஏற்கப்பட மாட்டாது.

2. பதிவு மற்றும் அனுபவம்.

i. தமிழ்நாடு மற்றும் புதுச்சேரி வழக்கறிஞர்கள் கவுன்சிலில் பதிவு பெற்றிருக்க வேண்டும் அல்லது இந்தியாவின் ஏதாவது ஒரு மாநிலத்தில் வழக்கறிஞர்கள் கவுன்சிலில் பதிவு பெற்றிருக்க வேண்டும்.

ii. மேற்படி நியமனம் குறித்த அறிவிக்கை வெளியான தேதியில் தமிழ்நாட்டில் உள்ள ஏதாவது ஒரு நீதிமன்றத்தில் வழக்கறிஞராகவோ, அரசு வழக்கறிஞராகவோ பணியாற்றிக் கொண்டிருப்பதுடன் அந்நாளில் குறைந்த பட்சம் பத்து ஆண்டுகளுக்கு குறையாமல் பணியாற்றி இருக்க வேண்டும்.

iii. மேற்படி பணி அனுபவச் சான்றிதழ் சென்னை உயர் நீதிமன்ற அரசு வழக்கறிஞர், சென்னை உயர் நீதிமன்ற கூடுதல் அரசு வழக்கறிஞர், மாவட்ட அரசு வழக்கறிஞர், கூடுதல் அரசு வழக்கறிஞர், அரசு வழக்கு விசாரணை இயக்குநரகத்தின் சிறப்பு வழக்கறிஞர் மற்றும் மூத்த வழக்கறிஞர்களினால் வழங்கப்பட்டிருக்க வேண்டும்.

குறிப்பு. அ) மூத்த வழக்கறிஞர் என்றால் சென்னை உயர் நீதிமன்றத்தினால் மூத்த வழக்கறிஞர் என்று 1961ஆம் ஆண்டு வழக்கறிஞர்கள் சட்டப் பிரிவு 16(2)ன் கீழ் அங்கீகரிக்கப்பட்டவர் ஆவார்.

ஆ) விண்ணப்பதாரர்கள் இவ்வறிவிக்கை வெளியிடப்பட்ட நாளில் குற்றவியல் நீதிமன்றங்களில் வழக்கறிஞராக பணியாற்றியிருப்பதுடன் பணி நியமனத்திற்கான தேர்வு நாள் மற்றும் பணி நியமன ஆணை வழங்கப்படுகிற நாளில் தொடர்ந்து அவர் வழக்கறிஞராகப் பணியாற்றிக் கொண்டிருக்க வேண்டும்.

இ) குற்றவியல் நீதிமன்றங்கள் என்று அழைக்கப்படுவது யாதெனில் 2023ஆம் ஆண்டு பிஎன்எஸ்எஸ் சட்டம் பிரிவு 6ன் கீழ் வழங்கப்பட்ட அதிகாரத்தின் கீழ் வரையறை செய்யப்பட்டவை ஆகும்.

3. மொழிகள்.

ஆங்கிலம் மற்றும் தமிழ் மொழியில் படிக்கவும், எழுதவும், பேசவும் உரிய தகுதி பெற்றிருக்க வேண்டும்.

விளக்கம்– ஒருவர் 10 ஆம் வகுப்பு பொதுத் தேர்வில் தேர்ச்சி பெற்றிருந்தாலோ அல்லது அதற்கு இணையாக உள்ள தேர்வில் தமிழ் மொழியை ஒரு பாட மொழியாகக் கொண்டு தேர்ச்சி பெற்றிருந்தாலோ அவர் தமிழ் மொழியில் உரிய தகுதி படைத்தவராக கருதப்படுகிறார்.

4. வயது வரம்பு – விண்ணப்பதாரர் 1.1.2025 அன்று 35 வயது பூர்த்தியடைந்தவராக இருக்க வேண்டும் என்பதுடன் அவர் 65 வயது பூர்த்தியடைந்தவராக இருக்கக் கூடாது.

5. இதர தகுதிகள்

i) 2016ஆம் ஆண்டு தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள் (பணி விதிமுறைகள்) சட்டம் பிரிவு 20(7)ன் கீழ் அவர் தகுதியுடைய நபராக இருக்க வேண்டும்.

6. விண்ணப்பதாரர் புதிய குற்றவியல் சட்டங்கள் (பிஎன்எஸ்எஸ், பிஎன்எஸ் மற்றும் பிஎஸ்ஏ) குறித்து நன்கு அறிந்திருக்க வேண்டும்.

7. பணி ஒப்பந்தக் காலம் – பணி நியமன ஒப்பந்தக் காலம் ஓராண்டு ஆகும். அவர் பணிக் காலத்தின் செயல்பாட்டின் அடிப்படையில் வருடாந்திர பணி நியமனக் காலம் மேலும் நீட்டிக்கப்படும்.

8. பணியின் தன்மை.

(i) மேற்படி பணிக்காக தேர்ந்தெடுக்கப்பட்ட விண்ணப்பதாரர்கள் மாண்புமிகு உயர் நீதிமன்றம் / உச்ச நீதிமன்றம் தொடர்பான வழக்குகளில் எதிர்மனுக்கள் தாக்கல் செய்தல், நிலை அறிக்கைகள் மற்றும் இதர நீதிமன்ற நடவடிக்கைகள் சார்ந்த பணிகளில் நிபுணத்துவம் மிக்கவராக இருக்க வேண்டும்.

(ii) மேற்படி பணிக்கு தேர்ந்தெடுக்கப்பட்ட நபர் குற்றப் புலனாய்வுத் துறை குற்றப் பிரிவின் வழக்குகளில் புலன் விசாரணை அதிகாரிகளுக்கு உதவியாக இருத்தல் (ஆ) வழக்குகள் தொடர்பாக சட்டக் கருத்துரை அளித்தல் (இ) எதிர்மனு தாக்கல் / நிலை அறிக்கைகள் தயாரித்தல் / பிணை கோரும் மனுவிற்கு எதிராக வழக்காடுதல் / மனுக்களுக்கு எதிராக இடைக்கால

தடையாணை பெறுதல் மற்றும் மனுக்களை தள்ளுபடி செய்யும் வகையில் வழக்காடுதல் / கைதிகளை காவல் பாதுகாப்பில் எடுக்கக் கோரி மனு அளித்தல் / இதர நீதிமன்ற நடவடிக்கைகளில் உதவியாக இருக்க வேண்டும்.

(iii) புதிய சட்டங்களுக்கான வரைவுகள் தயாரித்தல், மாநில காவல் துறையினருக்கான போட்டிகளை நடத்துதல் மற்றும் காவல் அதிகாரிகளுக்கான பயிற்சிகள் வழங்குதல் உள்ளிட்ட பணிகளில் குற்றப் பிரிவு குற்றப் புலனாய்வுத் துறையின் கூடுதல் காவல் துறை இயக்குநருக்கு உதவி புரிய வேண்டும்.

(iv) பணிக்கு தேர்ந்தெடுக்கப்பட்ட நபர் குறிப்பிட்ட வழக்குகளில் குற்றப் பிரிவு குற்றப் புலனாய்வுத் துறை சார்பாக நீதிமன்றங்களில் வாதிட வேண்டும்.

(v) இப்பணிக்கு தேர்ந்தெடுக்கப்பட்ட நபரானவர் மேற்படி பணிகளின்போது வழக்கில் தனிப்பட்ட ஆர்வம் காட்டக்கூடாது.

(vi) அவர் எந்தவொரு வழக்கிலும் குற்றப் பிரிவு குற்றப் புலனாய்வுத் துறைக்கு எதிராக வழக்காடுதல் கூடாது.

(vii) விண்ணப்பதாரர் தனது கடமைகளை நிறைவேற்றும் போது நேர்மை தவறாது, நடுநிலையோடு, பாரபட்சமின்றி செயல்பட வேண்டும்.

(viii) அவர் எந்தவொரு அரசியல் கட்சி, மதச் சார்புடைய இயக்கங்கள் அல்லது அரசியல் கட்சிகளால் நிர்வகிக்கப்பட்டு வரும் குறிப்பிட்ட எந்தவொரு அமைப்பினையும் சாராதவராக இருத்தல் வேண்டும்.

(ix) இப்பணியானது ஒரு முழு நேரப் பணி ஆகும். எனவே அவர் வேறு எவ்விடத்திலும் பணி செய்யக்கூடாது.

9) பணி முறிவு – மேற்படி பணிக்கு தேர்ந்தெடுக்கப்படும் நபரின் பணிக்காலத்தில், அவருக்கு எதிரான எதிர்மறை குறிப்புரைகள்/பணிக்காலத்தில் செயல்படாத் தன்மை போன்றவைகளுக்காக ஒரு மாத முன்னறிவிப்புடன் அவரது பதவிக் காலம் முறிக்கப்படும். மேலும், மேற்படி பணியில் உள்ள நபர் கொடுங்குற்றங்களில் ஈடுபட்டிருந்தாலோ/குற்றச் செயல்களில் ஈடுபட்டிருந்தாலோ மேற்படி நிபந்தனை பொருந்தாது என்பதுடன் அவரது பணிக் காலம் உடனடியாக முறிக்கப்படும்.

**10) பணி நியமனத்திற்கான தகுதி இழப்பு:–**

கீழ்கண்ட காரணங்களுக்காக ஒரு நபர் பணி நியமனத்திற்கான தகுதியை இழக்கிறார்.

(i) திருமணமான அல்லது திருமணமாகாத வேறு ஒரு நபருடன் உறவில் இருந்தாலோ அல்லது உடனிணை வாழ்வில் இருந்தாலோ அல்லது தன் வாழ்க்கைத் துணை உயிருடன் இருக்கும் போது வேறு ஒருவருடன் திருமணம் செய்துகொண்டவராகவோ அல்லது உடனிணை வாழ்வில் இருப்பவராகவோ உள்ளவர் ; அல்லது

(ii) மத்திய அரசு அல்லது மாநில அரசு அல்லது உயர் நீதிமன்றம் அல்லது சட்டப்பூர்வ அல்லது உள்ளாட்சித்துறை அல்லது எந்த பணியிலிருந்தும் பணிநீக்கம் செய்யப்பட்ட அல்லது மேற்குறிப்பிட்ட அமைப்புகளிலிருந்து களங்கமான நடத்தை காரணமாக பணிநீக்கம் செய்யப்பட்டவர்; அல்லது

(iii) உதவி அரசு வழக்கறிஞராக / நீதித்துறை அதிகாரியாக / அரசுப் பணியாளராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட பிறகு அப்பணியிலிருந்து வெளியேற்றப்பட்டவர்கள் / நீக்கப்பட்டவர் அல்லது ஏதேனும் ஒரு குற்றம் புரிந்ததற்காக தண்டனை பெற்றவர்/ விடுவிக்கப்பட்டவர்/ வெளியேற்றப்பட்டவர்; அல்லது

(iv) உயர் நீதிமன்றம் அல்லது ஒன்றிய ஆட்சிமன்றப் பணிகள் ஆணையம் (UPSC) அல்லது ஏதேனும் மாநில அரசு பணியாளர் தேர்வாணையங்கள் அல்லது வேறு ஏதேனும் ஆட்கள் தேர்வு நிறுவனம், வாரியம் அல்லது ஆணையத்தால் நடத்தப்பட்ட தேர்வுகள்/நேர்காணல் அல்லது தேர்வுகளில் கலந்து கொள்வதிலிருந்து தற்காலிகமாக அல்லது நிரந்தரமாக தடை செய்யப்பட்ட அல்லது தகுதி நீக்கம் செய்யப்பட்டவர் ; அல்லது

(v) வழக்கறிஞர்கள் மன்றத்தால் (பார் கவுன்சில்) அம்மன்றப் பட்டியலில் இருந்து நிரந்தரமாக நீக்கப்பட்டவர் அல்லது இடைநீக்கம் செய்யப்பட்டவர்; அல்லது

(vi) ஒருவருக்கு எதிராக ஒழுங்கு நடவடிக்கைகள் தொடங்கப்பட்டிருந்தாலோ அல்லது வழக்கறிஞர்கள் மன்றம் அல்லது ஏதேனும் ஒழுங்குமுறை

ஆணையம் அல்லது நீதிமன்றத்தினால் அபராதம் அல்லது தண்டனை விதிக்கப்பட்டிருந்தாலோ அல்லது பரிசீலிக்கப்பட்டிருந்தோலோ, மாண்புமிகு உயர் நீதிமன்றத்தின் கருத்துப்படி, நீதித்துறை சேவையில் நியமனம் செய்வதற்கு அவர் தகுதியற்ற நபராக கருதப்படுகிறார்; அல்லது

(vii) ஒருவர் வழக்கறிஞராக பணியில் இருந்து, வழக்கறிஞர்கள் சட்டம், 1961 (மத்திய சட்டம் 25, 1961) அல்லது நீதிமன்றம் அல்லது நீதிமன்றத்தின் உத்தரவுகளின்படி வழக்கறிஞர்கள் மன்றத்தால் அல்லது நீதிமன்றத்தால் அல்லது நீதிதுறை சார்ந்த மன்றங்களால் தொழில்முறையில் தவறு செய்தவர் என்று கண்டறியப்படுபவர்.

**11) குணாதிசயம் மற்றும் நடத்தை:**

**அ) ஒரு விண்ணப்பதாரரின் (ஆண் அல்லது பெண்) குணாதிசயம் அவரை அப்பதவிக்கு நியமனம் செய்வதற்கு எல்லா வகையிலும் ஏற்புடையதாகச் செய்ய வேண்டும். அந்த ஆண் அல்லது பெண் விண்ணப்பதாரர், இவ்வேலை வாய்ப்பு குறித்த அறிவிப்பாணை வெளிவந்த பிறகு நீதிமன்ற நடவடிக்கைகளில் பத்தாண்டுகளுக்கு குறையாத அனுபவம் உள்ள ஒரு மூத்த வழக்கறிஞரிடம் (அவ்வழக்கறிஞர் விண்ணப்பதாரரின் உறவினராக இருக்கக்கூடாது ஆனால் விண்ணப்பதாரரரின் தனிப்பட்ட வாழ்க்கை குறித்து நன்கு தெரிந்திருக்க வேண்டும்) தன்னுடைய குணாதிசயம் மற்றும் நடத்தை குறித்து சான்றிதழ் பெற்று சமர்ப்பிக்க வேண்டும்.**

**ஆ) நல்ல மன மற்றும் உடல் ஆரோக்கியமில்லாத நபர் (பெண் அல்லது ஆண்) இப்பதவிக்கு நியமிக்கப்பட மாட்டார்.**

12) சுய அறிவிப்புச் சான்றிதழ்

விண்ணப்பதாரர், பட்டப்படிப்புச் சான்றிதழ் மற்றும் வழக்கறிஞர்கள் மன்றம் அளித்த பதிவுச் சான்றிதழ் ஆகியவற்றுடன் தான் வழக்கறிஞர்கள் மன்றத்தில் தன்னுடைய பெயரை பதிவு செய்துள்ளதாகவும், பத்தாண்டுகள் அல்லது அதற்கு மேல் வழக்கறிஞராக பணிபுரிந்துள்ளதாகவும் ஒரு சுய அறிவிப்பு சான்றிதழை (விண்ணப்பதாரர், தான் வழக்கறிஞராக பணியாற்றியதை உறுதிப்படுத்த குறிப்பாக

கடந்த மூன்றாண்டுகளில் தான் ஆஜராகி நடத்திய வழக்குகள் குறித்த விவரங்களை இணைக்க வேண்டும்) விண்ணப்ப படிவத்துடன் இணைக்க வேண்டும்.

**13) மருத்துவ மற்றும் உடற்தகுதி**

i) பதவிக்கு நியமனம் செய்ய தேர்ந்தெடுக்கப்பட்ட விண்ணப்பதாரர்கள் பணியில் சேரும்போது பணி நியமன அதிகாரியிடம் உடல் தகுதி சான்றிதழை சமர்ப்பிக்க வேண்டும்.

ii) விண்ணப்பதாரர்களின் பார்வைத்திறன், தரநிலை – III ல் அல்லது அதற்கு மேற்பட்டு இருக்க வேண்டும். பார்வை குறைபாடு உள்ள விண்ணப்பதாரர்கள், அரசு மருத்துவமனையில் பணிபுரியும் தகுதி வாய்ந்த கண் மருத்துவரிடம் இருந்து பெற்ற தங்கள் பார்வைத்திறன் குறித்த சான்றிதழை பணியில் சேரும்போது பணி நியமன அதிகாரியிடம் சமர்ப்பிக்க வேண்டும்.

II. ஊதியம் – தொகுப்பூதியமாக மாதம் ரூ.50,000 (ஒப்பந்த அடிப்படையில்) வழங்கப்படும்.

III. இடஒதுக்கீடு குறித்த விதி – இப்பணி நியமனத்திற்கு சாதி மற்றும் வகுப்பு ரீதியான இடஒதுக்கீடு விதி பொருந்தாது.

IV. தேர்வு நடைமுறை

1. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் செய்த அறிவிப்பிற்கிணங்க, சேலம், மதுரை, திருநெல்வேலி, திருச்சி மற்றும் காஞ்சிபுரம் ஆகிய ஐந்து குற்றப்பிரிவு குற்றப்புலனாய்வுத்துறை சரகங்களுக்கு முறையே ஒரு சரகத்திற்கு ஒரு விண்ணப்பதாரர் என்ற முறையில் ஐந்து விண்ணப்பதாரர்கள் மட்டுமே பிரதான விண்ணப்பதாரர்களாக தேர்ந்தெடுக்கப்படுவர்.
2. விண்ணப்பதாரர்கள் தங்கள் விண்ணப்ப படிவத்திலேயே தாங்கள் எவ்விடத்தில் பணியமர்த்தப்பட வேண்டும் என்ற தங்கள் விருப்பத்தை (order of preference) குறிப்பிட வேண்டும். விண்ணப்பத்தில் ஒரு விருப்பமான இடத்தையாவது

குறிப்பிட வேண்டும். எந்தவொரு விருப்ப வரிசையும் தேர்வு செய்யப்படாத விண்ணப்பங்கள் முழுவதுமாக நிராகரிக்கப்படும்.

3. பெறப்பட்ட விண்ணப்பங்கள் பரிசீலனைக்குப் பிறகு, தகுதியான விண்ணப்பதாரர்கள் நேர்முகத் தேர்விற்காக குற்றப் பிரிவு குற்றப் புலனாய்வுத்துறையின் தலைமையகத்தில் உள்ள தேர்வுக் குழுவின் முன் அறிக்கை செய்யும்படி அழைக்கப்படுவார்கள். அதிக மதிப்பெண்கள் பெறும் தேர்வர் பதவிக்கு தேர்ந்தெடுக்கப்படுவார்.

4. <u>நேர்முகத் தேர்வு</u>

(i) நேர்முகத் தேர்வுக்கு அழைக்கப்பட்ட விண்ணப்பதாரர்கள் பற்றிய விபரம் தமிழ்நாடு காவல்துறை இணையதளத்தில் அறிவிக்கப்பட்டு, விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ள அலைபேசி எண் மூலம் தொலைபேசியில் தெரிவிக்கப்படும். நேர்முகத் தேர்வு நடைபெறும் தேதியில், அவர் நேர்முகத் தேர்வுக்கு அழைக்கப்பட்ட பதவிக்கான விண்ணப்பத்தில் குறிப்பிட்டுள்ள கோரிக்கைகளுக்கு துணையாக இருக்கக் கூடிய அசல் சான்றிதழ்கள் விண்ணப்பத்தில் உள்ள கோரிக்கைகளின் அடிப்படையில் சரிபார்க்கப்படும். அசல் ஆவணங்களை முழுமையாக ஆய்வு செய்த பிறகு, விண்ணப்பம் இறுதியாக ஏற்றுக்கொள்ளப்படும். பின்னர், தேர்வு செய்யப்பட்ட விண்ணப்பதாரர்களுக்கு நேர்முகத் தேர்வு நடத்தப்படும். விண்ணப்பங்கள் பரிசீலனையின்போது, "தேர்வர்களுக்கான அறிவுறுத்தல்களின்படி" ஆவணங்களில் ஏதேனும் சமர்ப்பிக்கப்படாவிட்டால் அல்லது தேர்வர் சமர்பித்த ஆவணங்களில் ஏதேனும் தவறானது/போலியானது என கண்டறியப்பட்டால், அந்த விண்ணப்பதாரர் தகுதி நீக்கம் செய்யப்பட்டு நேர்முகத் தேர்வில் பங்கேற்க அனுமதிக்கப்படமாட்டார்.

(ii) **நேர்முகத் தேர்வானது** <u>60 மதிப்பெண்களைக்</u> கொண்டது. விண்ணப்பதாரர்கள் தகுதி பெற குறைந்தபட்சம் <u>18 மதிப்பெண்களைப்</u> பெற்றிருக்க வேண்டும்.

(iii) அறிவுச் சாதுரியம், பொது அறிவு, சட்ட அறிவு, புதிய குற்றவியல் சட்டங்களின் அறிவு (பிஎன்எஸ், பிஎன்எஸ்எஸ், பிஎஸ்ஏ), நடைமுறை சட்டம் குறித்த கூர்மையான புரிதல், சட்டத்தின் கோட்பாடுகள், தெளிவான மற்றும் தர்க்கரீதியான வெளிப்பாடு, தீர்ப்பின் சமநிலை, திறன்கள், அணுகுமுறை, நெறிமுறைகள்,

ஒருங்கிணைக்கும் ஆற்றல், தகவல் தொடர்பு ஆற்றல், நடத்தை, பொருத்தம் மற்றும் நுட்பமான அறிவாற்றல், தேர்வரின் விருப்பம், சாதுரியம் மற்றும் நீதிமன்றத்தில் பல்வேறு சூழ்நிலைகளைக் கையாளும் திறன் ஆகியவற்றில் பதவிக்கான தேர்வரின் தகுதியை மதிப்பிடுவதே நேர்முகத் தேர்வின் நோக்கமாகும்.

(iv) 18 மதிப்பெண்களுக்கும் குறைவாகப் பெற்ற தேர்வர்கள் தகுதி நீக்கம் செய்யப்படுவார்கள்.

(v) ஒரு தேர்வரின் 'நடத்தை மற்றும் தகுதி' ஆகியவை பதவிக்கான நியமனம் குறித்து பரிசீலிப்பதற்கு மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தவை என்பதால், தேர்வரின் நடத்தை மற்றும் தகுதி ஆகியவை தகுதியான அதிகாரியால் விசாரிக்கப்பட்டு சரிபார்க்கப்படும்.

**5. இறுதி செய்யப்பட்ட தேர்வர்களின் பட்டியல்:**

மதிப்பெண் பட்டியலானது அதிக மதிப்பெண்களில் துவங்கி குறைந்த மதிப்பெண்கள் வரை வரிசைப்படுத்தப்படும். அதிக மதிப்பெண் பெற்றவர்களில் இருந்து, சேலம், திருநெல்வேலி, மதுரை, திருச்சி மற்றும் காஞ்சிபுரம் ஆகிய இடங்களில் 5 சட்ட ஆலோசகர் பணியிடங்கள் தகுதியின் அடிப்படையில் குற்றப் பிரிவு குற்றப்புலனாய்வுத்துறை மூலம் நிரப்பப்படும்.

அதிக மதிப்பெண் பெறும் தேர்வருக்கு, ஆண்/பெண் முன்னுரிமை அடிப்படையில் தேர்வு செய்த முதலாவது இடம் அளிக்கப்படும். அதன்பிறகு, 2வது அதிக மதிப்பெண்கள் பெற்ற தேர்வருக்கு, 1வது தேர்வாளரால் ஆண்/பெண் எடுக்கப்படாவிட்டால், முன்னுரிமை அடிப்படையில் தேர்வு செய்த முதலாவது இடம் ஒதுக்கப்படும். அதிக மதிப்பெண்களைப் பெற்ற தேர்வர்களுக்கு ஏற்கனவே ஒதுக்கப்பட்டிருந்தால், முன்னுரிமை அடிப்படையில் தேர்வு செய்த 2வது இடம் வழங்கப்படும். இதுபோன்ற முறையே தொடர்ந்து பின்பற்றப்படும்.

மதிப்பெண்களில் சமநிலை ஏற்பட்டால், கல்வித் தகுதி, குறிப்பிடத்தக்க சாதனைகள் மற்றும் கீழே குறிப்பிட்டுள்ள பிற சிறந்த அளவுகோல்கள் அடிப்படையில் பரிசீலனை செய்யப்பட்டு தேர்வுக் குழுவால் இறுதி முடிவு எடுக்கப்படும்.

| வ.எண் | அளவுகோல் |
|---|---|
| 1. | கல்வித் தகுதி – முதுகலை பட்டதாரி |
| 2. | 15 வருடங்களுக்கும் மேலான அனுபவம் |
| 3. | சட்ட தலைப்புகள் ஏதேனும் வெளியிடுதல் / புதிய சட்டங்கள் / சட்டங்களை வரையறுத்த குழுவில் ஒரு அங்கம் வகித்தல் |
| 4. | கையாண்ட வழக்குகளின் விவரங்கள் |
| 5. | சட்டத் துறையில் குறிப்பிடத்தக்க தனித்துவத்தின் முக்கிய சாதனைகள் |

**தேர்வுக் குழுவின் முடிவே இறுதியானது.**

**6. காத்திருப்பு பட்டியல்:**

ஐந்து காத்திருப்பு விண்ணப்பதாரர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு, தயார் நிலையில் வைக்கப்படுவார்கள். குற்றப்பிரிவு குற்றப்புலனாய்வுத்துறையின் நிபந்தனைகளின்படி எவரேனும் முதன்மை தேர்வர் பணியில் சேரத் தவறினால், காத்திருப்பு பட்டியலில் உள்ள முதல் தேர்வர் நியமனத்திற்கு பரிசீலிக்கப்படுவார்.

**7. தேர்வு செய்யப்பட்டவர்களின் பட்டியல் அறிவிப்பு:**

8. பட்டியலானது தமிழ்நாடு காவல் இணையதளத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டும், தேர்வு செய்யப்பட்டதன் அதிகாரப்பூர்வ தகவல் தனிநபர்களுக்கு தபால் மூலமாகவும் அனுப்பி வைக்கப்படும். பணி நியமன ஆணை வழங்கப்பட்டவுடன், தேர்ந்தெடுக்கப்பட்ட தேர்வர் நியமனக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ள காலக்கெடுவின்படி பணியில் சேரத் தவறினால், மேற்படி தேர்வு செய்யப்பட்ட நபரின் நியமனம் ரத்து செய்யப்பட்டு தகுதிப் பட்டியலில் அடுத்ததாக இடம் பெற்றுள்ள நபர் நியமனத்திற்கு பரிசீலிக்கப்படுவார்.

**V. விண்ணப்பங்களை நிராகரித்தல்:**

(1) முழுமையற்ற விண்ணப்பங்கள் அல்லது தகுதி/வயது/பாலினம்/கல்வித் தகுதி/பயிற்று மொழி/பிற அடிப்படைத் தகுதிகள் மற்றும் பிற அடிப்படைத் தகுதி அளவுகோல்கள் தொடர்பான தவறான விவரங்களைக் கொண்ட விண்ணப்பங்கள் உரிய செயல்முறைக்குப் பிறகு முழுவதுமாக நிராகரிக்கப்படும்.

(ii) தகுதி/வயது/பாலினம்/கல்வித்தகுதி/பயிற்று மொழி/பிற அடிப்படைத் தகுதிகள் மற்றும் பிற அடிப்படைத் தகுதி அளவுகோல்கள் தொடர்பாக தவறான நோக்கத்துடன் தவறான தகவல்களை அளித்து சலுகையைப் பெறும்பட்சத்தில், உரிய செயல்முறைக்குப் பிறகு முழுவதுமாக நிராகரிக்கப்படும்.

**VI. துணை ஆவணங்கள்:**

i இடைநிலைப் பள்ளி இறுதி வகுப்புச் சான்றிதழ் (SSLC) மற்றும் மேல்நிலைப் பள்ளிக் கல்விச் சான்றிதழ் (HSC) / பட்டயம் மற்றும் பட்டம் / தற்காலிக சான்றிதழ் / ஒருங்கிணைந்த மதிப்பெண் பட்டியல் ஆகியவை கல்வித் தகுதிக்கான சான்றாக ஏற்றுக்கொள்ளப்படும்.

ii. வழக்கறிஞர்கள் சங்க உறுப்பினர் என்பதற்கான சான்றாக வழக்கறிஞர் மன்றத்தால் வழங்கப்பட்ட சேர்க்கைச் சான்றிதழை தேர்வர்கள் சமர்ப்பிக்க வேண்டும்.

iii. அரசாங்கத்தால் வழங்கப்பட்ட ஏதேனும் ஒரு புகைப்படத்துடன் கூடிய அடையாள அட்டை.

iv. மேலே குறிப்பிட்டுள்ளபடி பணிபுரிவதற்கான சான்றிதழ்.

v. சுய உறுதிமொழி சான்றிதழ்.

vi. தேர்வர் நடத்திய வழக்குகளின் விவரங்கள் (பதிவு செய்யப்பட்ட மற்றும் பதிவு செய்யப்படாத).

vii. உடற்தகுதிச் சான்றிதழ், நற்பண்பு மற்றும் நன்னடத்தைச் சான்றிதழ் மற்றும் முக்கிய சாதனைகள் தொடர்பான ஆவணங்கள், விண்ணப்பத்தில் குறிப்பிட்டுள்ள

அளவுகோல்கள் பற்றிய ஆவணங்கள் உள்ளிட்ட தேர்வர்கள் தேர்வுக் குழுவிடம் வழங்க விரும்பும் தேவையான ஆவணங்கள்.

**VII. விண்ணப்பங்கள் சமர்ப்பிப்பதற்கான கடைசி தேதி:**

விண்ணப்பங்கள் சமர்ப்பிப்பதற்கான கடைசி தேதி 18.02.2025.